**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**

**CC. No. 25/2020**

2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் குற்றமுறையீட்டாளர் / எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 18 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாய் விக்னேஷ் | வயது | |
| தகப்பனார் பெயர் | நடராஜன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் நாகப்பட்டிணம் சட்டையப்பர் வடக்கு வீதியில் குடியிருந்து வருகிறேன். நான் நாகப்பட்டிணத்தில் கந்தசாமி பழக்கடை என்ற பெயரில் கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். நான் கடந்த 2018 ம் வருடத்தில் அரசு வேலை தேடிக்கொண்டிருந்தேன். எனது மாமா தியாகராஜன் என்பவர் திருவாரூர் சபாபதி முதலியார் தெருவில் வசித்து வருகிறார். எனது மாமா என்னிடம் சக்திவேல் என்பவர் துர்க்காலயா ரோட்டில் உள்ளார் என்றும், அவர் வேலை வாங்கி தருவார் என்றும் என்னிடம் சொன்னார். நான் 03.04.2018 ம் தேதி துர்க்காலயா ரோட்டில் உள்ள சக்திவேல் (1 வது எதிரி ) வீட்டிற்கு சென்று அவரை பார்த்தேன். அப்போது அவர் என்னிடம் எனது வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி என்பவர் நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவார் என்று என்னிடம் சொன்னார். சக்திவேல் என்னிடம் வேலைக்காக ரூ.2 லட்சம் பணம் கேட்டார். நான் 03.04.2018 ம் தேதியன்று ரூ.50,000/-ம், 04.04.2018 ம் தேதியன்று ரூ.50,000/-ம் நான் சக்திவேலுவிடம் கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம் 15 நாட்களில் வேலை கிடைத்து விடும் என்று சொன்னார். பின்னர் 15 நாட்கள் கழித்து நான் மீண்டும் சென்று எதிரி சக்திவேலிடம் வேலை சம்பந்தமாக கேட்டேன். அவர் இன்னும் 15 நாட்கள் காத்திருக்க வேண்டும் என்று சொன்னார். நான் மீண்டும் சென்று கேட்டபோது மே மாதம் கோர்ட் லிவு என்றும், ஜுன், ஜூலையில் வேலை கிடைக்கும் என்றும் சொன்னார். நான் ஜுன், ஜூலை மாதம் கழித்து கேட்டபோது இந்த வருட கடைசியில் கிடைத்துவிடும் என்று சொன்னார். இந்த நிலையில் என் மாமா என்னிடம் வேலை கிடைக்காது என்றும், 80 பேரிடம் வேலைக்காக பணம் வாங்கி சக்திவேல் ஏமாற்றியுள்ளதாகவும், அது சம்பந்தமாக வழக்கு நடந்து வருவதாகவும் சொன்னார். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்)**

நான் தனிப்புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சக்திவேல் வீட்டிற்கு சென்று யார், யார் பணம் கொடுத்தோம் என்றால் நானும், என் அப்பாவும் சென்று கொடுத்தோம்.

நான் தொகையை இரண்டு தடவையில் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தொகை கொடுக்கும்போது 2வது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை, என் அப்பா பார்த்துள்ளார். அதன் பிறகு நான் வேலை வேண்டும் என்றும் சக்திவேலிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். அதற்கு என்ன சொன்னார்கள் என்றால் வேலை போட்டு தருகிறோம் என்று சொன்னார். அதன்பிறகு சக்திவேல் மீதும், கோவிந்தலெட்சுமி மீதும் புகார் இருந்ததை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். கோவிந்தலெட்சுமி யார் வீட்டில் குடியிருந்தார் என்றால் சக்திவேல் வீட்டில் குடியிருந்தார். கோவிந்தலெட்சுமி வேலை வாங்கி தருவார் என்பதால்தான் சக்திவேலிடம் பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். கோவிந்தலெட்சுமி எப்படி வேலை வாங்கி தருவார் என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் அவர் மாவட்ட நீதிபதியிடம் வேலை பார்ப்பதாகவும், அதனால் வாங்கி தருவதாகவும் தெரிந்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரணைக்கு சம்மன் மூலம் அழைத்தார்களா? போன் மூலம் அழைத்தார்களா என்றால் போன் மூலம் அழைத்தார்கள். போலிசார் விசாரணையில் கோவிந்தலெட்சுமியை தெரியாது என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரணையில் கோவிந்தலெட்சுமியை நான் நேரடியாக பார்த்ததில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த நிலையில் நீதிமன்றத்தில் கோவிந்தலெட்சுமியை தெரியும் என்று பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரித்தபோது அப்பா நேரடியாக சென்று கோவிந்தலெட்சுமியை சந்தித்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுபோல் போலிசார் விசாரணையில் கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருந்தார் என்றும், மாவட்ட நீதிபதியிடம் வேலை பார்ப்பதால் வேலை வாங்கி தருவார் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இதுநாள் வரையில் நான் எதிரி சக்திவேலிடம் நான் கொடுத்த பணத்தை கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1வது எதிரி சக்திவேல் என்னிடம் 2வது எதிரியை சம்பந்தப்படுத்தி சாட்சியமளித்தால் பணம் தருவதாக கேட்டுக்கொண்டதன்பேரில் 2 வது எதிரிக்கு எதிராக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**

## CC. No. 25/2020

2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் குற்றமுறையீட்டாளர் / எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 19 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் | வயது | |
| தகப்பனார் பெயர் | மனோகரன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூரில் வசித்து வந்து ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கீழ்வேளூர் கிளையில் பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது நண்பர் அருண்குமாரின் அம்மா அவர்கள் அருண்குமாருக்கு தெரிந்தவர் மூலமாக கோர்ட்டில் வேலை வாங்கி தரப்போவதாகவும், உனக்கு வேண்டுமானால் சொல் என்றும், எனக்கு வேலை வாங்கி தருவதாகவும் சொன்னார். 2018 ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் என்னிடம் எதிரி சக்திவேல் வேலைக்காக ரூ.2 லட்சம் பணம் வேண்டும் என்றும் முன்பணமாக ரூ.1 லட்சம் வேண்டும் என்றும் எனது கல்வி சான்றிதழ்களின் நகல் வேண்டும் என்றும் அவரை அவரது வீட்டிற்கு சென்று சந்தித்தபோது சொன்னார். 15.02.2018 ம் தேதியன்று நானும், அருண்குமார், எனது மாமா ஜோதிராஜன் ஆகியோரும் 1வது எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று கொடுத்தோம். அப்போது பணத்தை வாங்கிக்கொண்டு இரண்டு மாதத்தில் வேலை கிடைத்தவுடன் மீதி பணத்தை கொடுக்கும்படி எதிரி சக்திவேல் சொன்னார். இரண்டு மாதம் கழித்து பலமுறை சென்று நான் சக்திவேலிடம் வேலை பற்றி கேட்டபோது இதோ வந்துவிடும், அதோ வந்துவிடும் என்று பதில் கூறினார். ஆனால் வேலை கிடைக்கவில்லை. இதுநாள்வரையில் கேட்டும் எனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. சக்திவேலிடம் பணம் கொடுத்து ஏமாந்தது தொடர்பாக புகார் வந்துள்ளதாவும், நீங்களும் பணம் கொடுத்து ஏமாந்துள்ளீர்களா என்றும் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்)**

நான் எதிரி சக்திவேல் மீது தனிப்பட்ட புகார்எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சக்திவேலிடம் யார், யார் சென்று பணம் கொடுத்தோம் என்றால் நான், அருண்குமார், என் மாமா ஜோதிராஜன் ஆகியோர் சென்று பணம் கொடுத்தோம். பணம் கொடுத்தால் வேலை கிடைக்கும் என்று என்னிடம் யார் சொன்னது என்றால் என் நண்பர் அருண்குமாரின் அம்மா என்னிடம் சொன்னார். சக்திவேல் தன்னிச்சையாக என்னிடம் பணம் கேட்கவில்லை என்றால் சரிதான். வேலை காலத்தில்

கிடைக்கவில்லை என்பதால் பலமுறை நான் சக்திவேல் வீட்டிற்கு சென்று கேட்டேன் என்றால் சரிதான். நான் சக்திவேலை அவரது வீட்டில் சந்தித்தபோது எதிரி கோவிந்தலெட்சுமி அங்கு இருந்தாரா என்றால் நான் முதல்முறை சென்றபோது இல்லை, மீண்டும் ஒரு நாள் சக்திவேல் வீட்டிற்கு நான் சென்றபோது எதிரி கோவிந்தலெட்சுமி அங்கு இருந்தார். அப்போது கோவிந்தலெட்சுமியிடம் வேலை பற்றி கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் கேட்டேன். அது சம்பந்தமாக பேசிக்கொண்டிருக்கிறோம், சீக்கிரம் கிடைத்துவிடும் என்று சொன்னார். யாரிடம் வேலை சம்பந்தமாக பேசிக்கொண்டிருப்பதாக கோவிந்தலெட்சுமி சொன்னார் என்றால் ஒரு ஜட்ஜியிடம் பேசிக்கொண்டிருப்பதாக சொன்னார். அதனால் எனக்கு நம்பிக்கை வந்தது. எனக்கு கோவிந்தலெட்சுமியை தெரியாது என்று சொல்லியுள்ளது சரியா என்றால் எனக்கு அவரை நேரடியாக தெரியாது. நான் சக்திவேல்வீட்டிற்கு சென்றபோது சக்திவேல்தான் கோவிந்தலெட்சுமியை அடையாளம் சொன்னார். ஆஜர் எதிரிதான் கோவிந்தலெட்சுமியா என்றால் அவர்தான். ஆஜர்எதிரி கோவிந்தலெட்சுமியிடம்தான் நான் வேலை சம்பந்தமாக பேசினேனாஎன்றால் ஆம். போலிசார் விசாரணையில் யார் மீது மோசடி வழக்கு இருப்பதாக தெரிந்துக்கொண்டேன்என்றால் சக்திவேல் மீதும், கோவிந்தலெட்சுமி மீதும் மோசடி வழக்கு இருப்பதாக தெரிந்து கொண்டேன். போலிசாரிடம் நேரில் சொன்னேனா அல்லது போன் மூலம் சொன்னேனா என்றால் போன் மூலம்தான் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரணையில் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும் என்றும், அவரை எதிரிசக்திவேல் வீட்டிற்கு சென்றபோது பார்த்தேன் என்றும், அவர் ஜட்ஜியிடம் வேலை சம்பந்தமாக பேசியதாகவும், அது சம்பந்தமாக நான் அவரிடம் நேரடியாக கேட்டதாகவும், அதனால் வேலை சம்பந்தமாக நம்பிக்கை ஏற்பட்டதாகவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. இதுநாள் வரையில் சக்திவேலிடம் பணம் கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். சக்திவேல் என்னிடம் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி சாட்சியமளித்தால் பணத்தை திருப்பிதருவதாக கேட்டுக்கொண்டதன்பேரில் தற்போது 2 வது எதிரியை வழக்கில் சம்பந்தபடுத்தியும் நீதிமன்றத்தில் அடையாளம் படுத்தியும் நீதிமன்றத்தில் தற்போது சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**

## CC. No. 25/2020

2021-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் குற்றமுறையீட்டாளர் / எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 20 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமரப்பன் | வயது | |
| தகப்பனார் பெயர் | சுப்பிரமணியன் | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் திருவாரூர் பாலாஜி நகரில் பெற்றோருடன் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். ஆஜர் எதிரி சக்திவேல் எனது அப்பா, அம்மாவிடம் எங்கள் வீட்டிற்கு வந்து எனக்கு கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். அது தொடர்பாக எனது அம்மாவும், அப்பாவும் 2018 ம் வருடத்தில் ஜனவரி மாதத்தில் சக்திவேல் வீட்டிற்கு சென்று வேலை சம்பந்தமாக கேட்டபோது ஆஜர் எதிரி சக்திவேல் வேலைக்காக ரூ.2 லட்சம் பணம் கொடுக்க வேண்டும் என்றும், முன்பணமாக ரூ.1 லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியுள்ளார். அதனால் எனது அப்பாவும், அம்மாவும் 11.01. 2018 ம் தேதி ரூ.50,000/-மும், 12.01.2018 ம் தேதி ரூ.50,000/-மும் கொடுத்தார்கள். அப்போது வேலை இரண்டு மாதத்தில் கிடைத்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால் வேலை கிடைக்கவில்லை. திரும்ப சென்று ஏப்ரல் மாதத்தில் கேட்டபோது ஜுன், ஜுலையில்வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஆகஸ்ட் மாதத்தில் சென்று மீண்டும் கேட்டபோது எதிரி சக்திவேல் வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். ஆனால்வேலை கிடைக்கவில்லை. மீண்டும் சென்று கேட்டபோது வேலை கிடைக்காது என்று கூறி ரூ.50,000/- பணத்தை திருப்பி கொடுத்துவிட்டார். போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (1 வது எதிரி தரப்பில்)**

நான் தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சக்திவேலிடம்தொகை கொடுக்கும்போது நான் சென்றேனா என்றால் இல்லை, என் அப்பாவும், அம்மாவும்போனார்கள். போலிசார் என் அம்மாவிடம்விசாரித்தார்களா, என்னிடம்விசாரித்தார்களா என்றால் என்னிடம் போன் மூலம் விசாரித்தார்கள். நான் நடந்த விபரம் அனைத்தையும் சொன்னேன் என்றால் சரிதான். நாங்கள் எதிரி சக்திவேலிடம் கொடுத்த பணத்தில் ரூ.50,000/-த்தை திரும்ப பெற்றுக்கொண்டுள்ளோம் என்றால் சரிதான். பணத்தை திரும்ப பெறும்போது யார் இருந்தார்கள் என்றால் ஆஜர் எதிரிகள் இருவரும் இருந்ததாக என் அம்மா என்னிடம் சொன்னார். நான்எதிரிகள்

இருவரையும் நேரடியாக பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எப்போது என்றால் ஒருமுறை வேலை சம்பந்தமாக கேட்பதற்கு துர்க்காலயா ரோட்டில் உள்ள சக்திவேல் வீட்டிற்கு சென்றபோது கோவிந்தலெட்சுமியை பார்த்தேன்.

**குறுக்கு விசாரணை (2 வது எதிரி தரப்பில்)**

போலிசார் விசாரணையில் கோவிந்தலெட்சுமியை தெரியாது என்றுதான் சொன்னேன் என்றால் சரிதான். சக்திவேலிடம் நான் இதுநாள் வரையில் ரூ.50,000/-பணத்தை திரும்ப கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் என் அம்மாவும், அப்பாவும் எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று பணத்தை திரும்ப பெறும்போது எதிரி கோவிந்தலெட்சுமியை அவர்கள் பார்த்தார்கள் என்ற விபரத்தையும், நான் வேலை சம்பந்தமாக எதிரி சக்திவேல் வீட்டிற்கு சென்று கேட்டபோது எதிரி கோவிந்தலெட்சுமியை பார்த்ததாவும், வேலை சம்பந்தமாக விசாரித்ததாகவும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி சக்திவேல் என்னிடம் சாட்சியத்தின்போது எதிரி கோவிந்தலெட்சுமியை சம்பந்தப்படுத்தி கூறினால் ரூ.50,000/-பணத்தை திருப்பி தந்துவிடுவதாக என்னிடம் கேட்டுக்கொண்டதன்பேரில் நான் தற்போது எதிரி கோவிந்தலெட்சுமியை வழக்கில் சம்பந்தப்படுத்தி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.